**செ.வெ.எண்: 73** **நாள்:29.03.2019**

**கரூர் மாவட்டம்**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவின் பணிகளை தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.பிரசாந்த்குமார்.இஆப., மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.த.அன்பழகன்.இஆப., ஆகியோர் பார்வையிட்டு ஆய்வுசெய்தனர்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள மக்களவை பொதுத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு, ஒற்றைச்சாளர முறையில் அனுமதி வழங்கும் குழு, கணக்கீட்டுக்குழு என பல்வேறு குழுக்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

23-கரூர் மக்களவைத்தொகுதிக்கு தேர்தல் பொதுப்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு.பிரசாந்த்குமார்.இஆப., (Mr.PRASHANT KUMAR.IAS) மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.த.அன்பழகன்.இஆப., ஆகியோர் மேற்சொன்ன குழுக்கள் செயல்படும் விதம் குறித்து இன்று(29.03.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சியர் அலுவலத்தின் தரைதளத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் அருகில் உள்ள ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவிற்கான அறையினை பார்வையிட்ட அவர்கள், அங்கு தொலைக்காட்சிப்பெட்டிகள் வைக்கப்பட்டு உள்ளூர் கேபிள் சேனல்கள் மற்றும் இதர சேனல்களில் அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றதா என்று முறையாக கண்காணிக்கப்படுவதை பார்வையிட்டனர்.

“இந்தக்குழுவின் மூலம் கரூர் மாவட்டத்தில் ஒளிபரப்பாகும் கேபிள் டிவி சேனல்கள் மற்றும் இதர சேனல்களும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்படும். கேபிள் டி.விக்களில் அரசியல் கட்சியினர் விளம்பரம் செய்ய விரும்பினால் முன்னதாகவே ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழுவில் அந்த வீடியோவை அளித்து ஒப்புதல் பெற வேண்டும். கேபிள் டிவி சேனல்கள் மற்றும் இதர சேனல்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் ஒவ்வொரு நாளும் எத்தனை முறை ஒளிபரப்பப்படுகின்றது என்பது கணக்கெடுக்கப்பட்டு, கணக்கீட்டுக் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதனடிப்படையில் சம்மந்தப்பட்ட வேட்பாளரின் செலவுக்கணக்கில் விளம்பரத்திற்கான செலவு சேர்க்கப்படும்” என்ற விவரங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் பொதுப்பார்வையாளரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

அதனைத்தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளையும் தேர்தல் பொதுப்பார்வையாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், அரசியல்கட்சியினர் வாகன அனுமதி உள்ளிட்ட பல்வேறு அனுமதிகளை பெறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒற்றைச்சாளர முறையில் (SINGLE WINDOW SYSTEM) அனுமதி வழங்கும் அறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் தேர்தல் பொதுப்பார்வையாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

இந்நிகழ்வின்போது, துணை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலருமான திரு.ச.சூர்யபிகராஷ், மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) திருமதி.சிவப்பிரியா,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.செல்வசுரபி, தேர்தல் பிரிவு வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**